# DHEERAN IAS ACADEMY®

(Specialized Institute for UPSC, SSC, TNPSC, TNUSRB and Banking)
Raj Rathna Building, Lawley Road Bus Stop, Maruthamalai Main Road, Coimbatore -03
Cell: 81783 18007, 93379 97597 Email: dheeraniasacademy@gmail.com

**நடப்புநிகழ்வுகள் – ஜனவரி 2023**

## தமிழ்நாடு

- "நலம் 365" என்ற யூ-டியூப் சேனல் தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறைக்கென பிரத்தேயமாக தொடங்கப்பட்டுள்ளது.

- சாலை விதிகளை மீறும் விவரங்களை பதிவு செய்ய மாநகர ரோந்து போலீஸாருக்காக "இ-பிட்" என்ற செயலி சேலத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
    - இ-பிட் ரோந்து பட்டியிலில் 1,100 இடங்கள் இடம் பெற்றுள்ன

- கல்வி நிறுனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து வழங்க தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

- DE அமைப்பு வெளியிட்ட பெண்கள் வாழ்வதற்கான சிறந்த நகர பட்டியலில் சென்னை முதலிடம் (10லட்சத்திற்கும் அதிகமானோர்) பெற்றுளது.
    - 2ம் இடம் – புனே
    - 3ம் இடம் – பெங்களுரு
    - 4ம் இடம் – கோவை
    - 5ம் இடம் – மதுரை

- கால்நடைகளை பாதுகாக்கும் வகையில் தமிழக இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் கன்று பாதுகாப்புப் பெட்டகம் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்.
    - தமிழக இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் – பி.கே.சேகர்பாபு

- தமிழகத்தில் நூலகங்களை நிர்வகிக்க 15 பேர் அடங்கிய மாநில நூலகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
    - தலைவர் – பள்ளிகல்வித்துறை அமைச்சர்

- ஜனவரி 11ல் சர்வதேச சொகுப்பு கப்பல் தூத்துகுடி வ.உசி. துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது.
    - கப்பலின் பெயர் – எம்.எஸ். அமிரா
    - 2022 டிசம்பர் 22 பிரிட்டனில் இருந்து புறப்பட்டது.

- 2027 ஆண்டு வரை "முதல்வரின் விரிவான காப்பீட்டத் திட்டம்" நீட்டிக்கப்பட்டுள்ளது.
    - இந்திட்டத்தில் 1.23கோடிபேர் பயனடைந்துள்ளனர்
    - 2009-ல் கலைஞர் காப்பீடு திட்டம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது.

- 2011-ல் மேம்படுத்தப்பட்டு “முதல்வரின் விரிவான காப்பீட்டுத் திட்டம்” எனப் பெயர் மாற்றம் செய்யபட்டது.
- 2023-ல் இத்திட்டம் முடிவடைய உள்ள நிலையில் 2027 வரை நீடிக்கப்பட்டள்ளது.

➢ பாக் நீரிணைப்பு மற்றும் இராமர் பாலம் பகுதிகளை ஆழப்படுத்தி கடல் போக்குவரத்திற்கு உகந்ததாக மாற்றும் திட்டமான சேது சமுத்திர திட்டம் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- இத்திட்டம் 300மீ அகலமும், 12மீ ஆழமும் 167 கி.மீ நீளமும் கொண்டது.
- 1860 – ரூ.50லட்சம் செலவில் கமாண்டர் டெய்லர் என்பவரால் உருவாக்கப்பட்டது.
- 1955 – டாக்டர் ஏ.ராமசாமி முதலியார் குழு ஆய்வு
- 1963 – மத்திய அமைச்சரவை கூட்டம் ஆய்வு
- 1964 – நாகேந்திரசிங் தலைமையிலான உயர்நிலைக் குழு ஆய்வு
- 2004-ல் ரூ.2427 கோடி செலவில் திட்டத்திற்கு அனுமதி
- 2005 – ஜூலை 2-ல் திட்டம் தொடங்கப்பட்டது.

➢ தமிழகத்தில் அனைத்து அரசு பள்ளிகளிலும் காலை உணவுத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- இத்திட்டம் 2022 செப்டம்பர் 15ல் மதுரையில் தொடங்கப்பட்டது.

➢ இந்தியாவில் மின்னணு கழிவுகளை உருவாக்கும் மாநிலங்களில் தமிழகம் இரண்டாவது இடம் பிடித்துள்ளது.
- முதல் இடம் –மும்பை
- மூன்றாவது இடம் – ஆந்திரப்பிரதேசம்

➢ தமிழக அரசின் சார்பில் 2024-ல் உலக முதலீட்டாளாளர்கள் மாநாடு சென்னையில் நடைபெறும் என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

➢ தூத்துக்குடி எட்டயுரம் பகுதியை சேர்நத திருநங்கையான ஸ்ருதி தமிழகத்தில் முதன் முறையாக கிராம உதவியாளாராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவர் மேலகரந்தை கிராமத்தில் பணி நியமனம் செய்யப்ப்பட்டுள்ளார்

➢ நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிப் பட்டியில் தமிழகம் மூன்றாம் இடம் பிடித்துள்ளது.
- 1வது இடம் – மகாராஷ்டிரா
- 2வது இடம் – குஜராத்

➢ ஜனவரி 16-ல் ஆதரவற்ற விலங்குகள் பராமரிப்புக்காக “வள்ளலார் பல்லுயர் காப்பகங்கள்” திட்டத்தினை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- வள்ளலாரின் 200-வது பிறந்த ஆண்டை முன்னிட்டு இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- 2 கோடியே 14 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

➢ “நம்ம ஊர் பள்ளி” திட்டதிற்காக தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களுது ஒரு மாத ஊதியத்தை நன்கொடையாக வழங்கினர்.

- அரசு பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- தொடங்கப்பட்ட நாள் – 19.01.2023

- சென்னையில் ஆமைகளை பாதுகாப்பதற்கு தனித்துவமான மையத்தை எற்படுத்த தமிழக அரசு உத்தரவு.
    - தமிழ்நாட்டில் 5வகையான ஆமைகள்  இனங்கள் உள்ளன. இவற்றில் ஆலிவ் ரிட்லி வகை ஆமை இனங்கள் குறிப்பிடத்தக்கவை. இந்த வகை ஆமைகளை காக்க பல்வேறு நடவடிக்கைககளை அரசு எடுத்து வருகிறது.
    - 1974-ல் ஆமை குஞ்சு பொறிப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது

- கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் நாட்டில் திருவண்ணாமலை மாவட்டம் மூன்றாம் இடம் பிடித்துள்ளது.
    - ஒடிசாவின் கஞ்சாம் மாவட்டம் முதலிடமும், ராஜஸ்தானின் பார்மிரா மாவட்டம் இரண்டாம் பிடித்துள்ளது.
    - மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டம் 25.08.2005ல் நடைமுறைக்கு வந்தது

- தில்லி கடமைப் பாதையில் குடியரசு தின விழா அணிவகுப்பில் பெண்களின் முக்கியத்துவம், தமிழகத்தின் கலாச்சாரத்தைப் போற்றும் வகையில் அலங்கார ஊர்தி அமைக்கப்பட்டுள்ளது.
    - இவற்றில் பங்கேற்ற பெண் சிலைகள்
    - ஔவையார்
    - எம்.எஸ்.சுப்புலெட்சுமி
    - பால சரஸ்வதி (பரத கலைஞர்)
    - மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்
    - முத்துலட்சுமி ரெட்டி (முதல் பெண் மருத்துவர்)
    - பாப்பம்மாள் (இயற்கை விவசாயி)

## இந்தியா

- இந்தியாவின் முதல் அரசியலமைப்பு எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக கேரளாவின் கொல்லம் மாவட்டம் தேர்வு

- ஜனவரி 1 முதல் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் (NFSA) கீழ் உள்ள 81.35கோடி பயனாளிகளுக்கு ஆண்டு முழுவதும் இலவச உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட உள்ளது.
    - தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் – 2013
- ஜனவரி 3-7 வரை 108வது இந்திய அறிவியல் மாநாடு மகாராஷ்டிரா மாநிலம் நாகபுரியில் நடைபெற உள்ளது.
    - “பெண்களின் முன்னேற்றத்துடன் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி” என்ற தலைப்பில் பிரதமர் உரையாற்ற உள்ளார்.
    - 1914-முதல் இம்மாநாடு நடைபெற்று வருகிறது.
- நாட்டின் பணமதிப்பு இழப்பீட்டிற்கு பிறகு ரூபாய் நோட்டுகளின் மதிப்பு 83% அதிகரித்துள்ளது.

- பண மதிப்பிழப்பு செயல்படுத்தப்பட்ட ஆண்டு – 2016
- நாட்டின் பணமதிப்பு இழப்பீட்டிற்கு பிறகும் கள்ள ரூபாய் நோட்டுகளின் புழக்கம் அதிகரித்துள்ளது என தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) தெரிவித்துள்ளது.
- தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) – 1986

➢ ஜனவரி 13-ல் உலகின் நீளமான சொகுசு நதி வழி சொகுசு கப்பல் சேவையான “கங்காவிலாஸ்”-யை பிரதமர் தொடங்கி வைக்கிறார்.
  - இது பயணம் செய்யும் தூரத்தினை வைத்து கணக்கிடப்படுகிறது.
  - உத்திர பிரதேசம் வாரணாசி முதல் அஸ்ஸாம், திப்ருநகர் வரையிலான 4000கி.மீ தூரத்திற்கு பயணம் செய்ய உள்ளது.
  - கங்கை, பிரம்மபுத்திரா உட்பட்ட 27 நகரங்களில் 50 நாட்கள் பயணம் செய்கிறது.

➢ கொல்கத்தா நகரின் ஹூக்ளி ஆற்றில் நீருக்குள் பயணிக்கும் இந்தியாவின் முதல் மெட்ரோ ரயில் சுரங்கப்பாதை அமைக்கப்பட உள்ளது.

➢ கடந்த டிசம்பரில் இந்தியாவின் வேலையின்மை 8.30%மாக உயர்ந்துள்ளது.
  - நகர்புறங்களில் 8.96%லிருந்து 10.09%மாக உயர்ந்துள்ளது.
  - நகர்புறங்களில் 7.55%லிருந்து 7.44%மாக உயர்ந்துள்ளது.
  - ஹரியானாவில 37.4%வும், ராஜஸ்தானில் 28.5%மாக வேலையின்மை உள்ளது.

➢ 2024-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மக்கள் மருந்தம் 10,000-ஆக உயர்த்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
  - மக்கள் மருந்து திட்டம் – 2008ல் கொண்டு வரப்பட்டது.

➢ ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் உள்ள ஆளுநர் மாளிகையில் “பொலிவுறு நகரம்” (ஸ்மார்ட் சிட்டி) திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு சட்டப் பூங்காவினை இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு திறந்து வைத்துள்ளார்
  - இதுவரை அரசியலமைப்பு சட்டத்தில் 105 சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதின் அரசியலமைப்பு சட்டம் ஓர் உயிர்ப்புள்ள ஆவணமாக திகழ்கிறது என தெரிவித்துள்ளார்

➢ இந்தியாவுக்கு 2வது கட்டமாக 12 சிவிங்கி புலிகள் (சீட்டா) கொண்டு வரப்படட உள்ளன.
  - இந்தியாவில் அழிந்து போன இனமாக 1952-ல் சிவிங்கி புலிகள் அறிவிக்கப்பட்டுள்ளது.
  - 2022 செப்டம்பரில் நமீபியாவில் இருந்து 8 சிவிங்கிப் புலிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

➢ உலகின் மிக உயரமான போர் முனையான சியாச்சினில் முதல் முறையாக சிவா சௌகான் என்ற முதல் பெண் ராணுவ அதிகாரி பணியமர்த்தப்பட்டுள்ளார்

➢ ஜனவரி 4ல் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ரூ.19,744 கோடி மதிப்பிலான தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டள்ளது.

- கரியமில் வாயு வெளியேற்றத்தை குறைக்கும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- அடுத்த 5 ஆண்டுகளில் 5 மில்லியன் மெட்ரிக் டன் பசுமை ஹைட்ரஜன் வாயுவினை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

➢ ஜனவரி 05-06 வரை மத்திய ஜல்சக்தி அமைச்சகம் சார்பில் மத்தியபிரதேச மாநிலம் போபாலில் மாநில நீர்வளத்துறை அமைச்சர்களின் முதலாவது தேசிய மாநாடு நடைபெறுகிறது.
  - மத்திய ஜல்சக்தி அமைச்சகம் – 2019

➢ கேரள மாநில வரலாறு மற்றும் பாரம்பரிய அருங்காட்சியகத்துடன் இணைந்து ஆவணக் காப்பகத்துறையால் உலகின் முதல் பனை ஓலை கையெழுத்து பிரதி அருங்காட்சியம் கேரளாவில் திறக்கபட்டுள்ளது.

➢ பீகாரில் ஜாதி வாரியாக கணக்கெடுப்பு இரு கட்டங்களாக நடத்தப்பட உள்ளது.
  - முதல் கட்ட கணக்கெடுப்பு ஜனவரி 21லும், இரண்டாம் கட்ட கணக்கெடுப்பு மார்ச் மாதமும் தொடங்க உள்ளது.

➢ 2022 ஆண்டில் இந்தியா சர்வதேச கார்கள் விற்பனையில் 3வது இடம் பிடித்துள்ளது.
  - 1வது இடம் – சீனா
  - 2வது இடம் – அமெரிக்கா

➢ அமெரிக்கா, கனடா, ஐக்கிய அரபு அமீரகம் உள்பட 10 நாடுகளைச் சேர்ந்த வெளிநாடு வாழ் இந்தியர்கள் யுபிஐ செயலி மூலம் பணப் பரிவர்த்தனை செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

➢ அடுத்த நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.6 சதவீமாக குறையும் என உலக வங்கி அறிவித்துள்ளது.
  - உலக வங்கி உருவாக்கப்பட்டது – 1945

➢ உலகளவில் மின்னணு கழிவுகளை உருவாக்குவதில் இந்தியா மூன்றாவது இடம் பிடித்துள்ளது.
  - முதல் இடம் – சீனா
  - இரண்டாவது இடம் – அமெரிக்கா

➢ மகப்பேற்றின்போது குழந்தை இறக்கும்பட்சத்தில் மனதளவில் பாதிக்குள்ளாகும் பெண் பணியாளர்களுக்கு 60 நாள்கள் சிறப்பு மகப்பேறு விடுப்பு வழங்கப்படும் என பிரதமர் அலுவலகப்பணி மற்றும் பணியாளர் சீர்திருத்தத் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

➢ உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட சீனாவை பின்னுக்கு இந்தியா முதலிடம் பிடித்துள்ளது.
  - இந்தியா – 142.3 கோடி
  - சீனா – 141.2 கோடி

DHEERAN IAS ACADEMY

- அரசமைப்புச் சட்டத்தின் 50வது பிரிவின்படி நிர்வாகத் தலையீடு இல்லாமல் நீதித்தறை சுதந்திரமாக செயல்பட்டு வருகிறது.
    - அரசமைப்பு சட்டத்தில் 99வது திருத்தத்தை மேற்கொண்டு தேசிய நீதிபதிகள் ஆணையத்தினை மத்திய அரசு அமைத்துள்ளது.

- இந்தியாவின் 74வது குடியரசு தின விழா பெண்சக்தி என்ற கருப்பொருளுடன் கொண்டாட்டம்
    - தேசியக்கொடி இயற்றப்படும் போது குண்டுகள் முழங்க “25 பவுண்டர்” என்ற பிரிட்டிஷ் கால துப்பாக்கி பயன்படுத்தப்பட்டு வந்ததது. அதற்கு பதிலாக உள்நாட்டில் தயாரிக்கபட்ட 105 மி.மீ துப்பாக்கி முதன் முறையாக பயன்படுத்தப்பட்டது.

- சிந்து நதிநீர்ப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தத்தில் மாற்றங்களை மேற்கொள்ள முன்வருமாறு பாகிஸ்தானுக்கு இந்தியா நோட்டீஸ் அனுப்பியுள்ளது.
    - சிந்து, ராவி, சட்லஜ், பியாஸ், செனாப், ஜீலம் ஆகிய நதிகள் இமயமலையில் உற்பத்தியாகி இந்தியாவை கடந்து பாகிஸ்தானுக்குள் பாய்கின்றன.
    - சுதந்திரத்தின போது ஏற்பட்ட பிரிவினைக்கு பிறகு நதிநீர் பிரச்சனைக்கு தீர்வு காண உலக வங்கி முயற்சி செய்துது.
    - 1960 ஆண்டு சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின்படி கிழக்கு நதிகளான ராவி, பியாஸ் சட்லஜ் ஆகியவற்றின் நீரை எவவித கட்டுபாடின்றி பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.
    - மேற்கு நதிகளான சிந்து, செனாப், ஜீலம் ஆகியவற்றின் நீர் பெரும்பாலும் பாகிஸ்தானுக்கு ஒதுக்கப்பட்டது. இந்திய சிறிய நீர்தேக்கங்களை அமைத்து கொள்ள இந்தியாவிற்கு அனுமதி அளிக்கப்பட்டது.
    - ஜீலம் நதியின் நதியின் குறுக்கே கிஷண்கங்கை நீர் மின் உற்பத்தி நிலையத்தையும், செனாப் நதியின் குறுக்கே ராட்லே மின் உறபற்தி நிலையத்தையும் இந்தியா முடிவு செய்துது. இதற்கு பாகிஸ்தான் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவித்துது.
    - சிந்து நதிநீர் ஆணையத்தில் விவாதிக்கவும் கடந்த 5 ஆண்டுகளாக பாகிஸ்தான் மறுத்து வந்துது.
    - நீர் மின் உற்பத்தி திட்டங்கள் தொடர்பாக ஆராய நடுநிலைத்தன்மை கொண்ட நிபுணர் குழுவை அமைக்க பாகிஸ்தான் உலக வங்கியிடம் 2015-ல் முறையிட்டது. பின்னர் அந்த முடிவில் பின் வாங்கி இந்த விவகாரத்தை மத்தியஸ்த நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என கோரியது.

- 2023-ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5.8%மாக இருக்கும் என ஐ.நா. கணித்துள்ளது.

- பிப்ரவரி 1ல் மத்திய அரசின் 2023-24ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டினை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.
- இந்தியாவின் முதல் பட்ஜெட் ஏப்ரல் 7, 1860-ல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தின் அதிகாரியும் ஸ்காட்லாந்தை சேர்ந்த பொருளாதார நிருபுணருமான ஜேம்ஸ் வில்சன் பிரிட்டன் அரசிடம் இந்தியாவிற்கான பஜ்ஜெட்டை சமர்பித்தார்.

- சுதந்திர இந்தியாவின் பட்ஜெட் – நவம்பர் 26, 1947 (நிதியமைச்சர் ஆர்.கே. சண்முகம் செட்டி)
- அதிகமுறை பட்ஜெட் தாக்கல் செய்தவர்கள்
    - மொரார்ஜி தேசாய் – 10 முறை
    - ப.சிதம்பரம் – 9 முறை
    - பிரணாப் முகர்ஜி – 8 முறை
    - யஷ்வந்த் சின்ஹா – 8 முறை
    - மன்மோகன் சிங் – 6 முறை
- பட்ஜெட் தாக்கல் நேரம் மாற்றம் செய்தவர்
    - 1998-ம் ஆண்டு பிரிட்டன் காலணி கால வழக்கப்படி அந்நாட்டின் நண்பகல் நேரத்துக்கு தாக்கல் செய்யப்பட்டதை 1999-ல் வாஜ்பாய் பிரதமாக இருந்த காலத்தில் யஷ்வந்த் சின்ஹா பட்ஜெட் தாக்கல் நேரத்தை காலை 11 மணியாக மாற்றி அமைத்தார்.
- பட்ஜெட் தாக்கல் செய்த பிரதமர்கள்
    - ஜவஹர்லால் நேரு (1958-59) – நிதியமைச்சர் டி.டி.கிருஷ்ணமாச்சாரி ராஜினாமா
    - இந்திராகாந்தி (1970-71) – நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் ராஜினாமா
    - ராஜீவ் காந்தி (1987-88) – நிதியமைச்சர் வி.பி. சிங் ராஜினாமா
- பட்ஜெட் தாக்கல் செய்த பெண்கள்
    - இந்திராகாந்தி
    - சீதாராமன்
- பட்ஜெட் தாக்கல் தேதி மாற்றம்
    - பிப்ரவரி இறுதி நாட்களில் தாக்கல் செய்து வந்த பட்ஜெட்டை 2017ல் அருண்ஜெட்லி பிப்ரவரி 1ம் தேதிக்கு மாற்றினார்.
- ரயில்வே பட்ஜெட் ஒருங்கிணைப்பு
    - 92 ஆண்டுகளாக ரயில்வே பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் 2017ல் ரயில்வே பட்ஜெட் மத்திய பட்ஜெட்டுடன் இணைக்கப்பட்டது.
- முதல் காகிதமில்லா பட்ஜெட்
    - கரோனா தொற்று பரவல் காரணமாக பிப்ரவரி 1, 2021ல் நிர்மலா சீதாராமன் கையடக்க கணினி மூலம் தாக்கல் செய்தார்

## சர்வதேச நிகழ்வுகள்

- 2023-ம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா.சபை அறிவித்துள்ளது.
    - 2018-ஐ தேசிய சிறுதானிய ஆண்டாக மத்திய அரசு கடைபிடித்திருந்து குறிப்பிடத்தக்கது.
- சீனா தனது முதல் ஹைட்ரஜன் ரயில் சேவை தொடங்கியுள்ளது. இதன் மூலம் ஆசியாவிலே முதல் ஹைட்ரஜன் ரயில் சேவையை தொடங்கி நாடு என்ற பெருமையை பெற்றுள்ளது.
    - உலகில் முதல் ஹைட்ரஜன் ரயில் சேவை தொடங்கிய நாடு – ஜெர்மனி
- 2022-ம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகியாக அமெரிக்காவின் ஆர்போனி கேப்ரியல் தேர்வு செய்யப்பட்டுளார்

- ஜனவரி 16-20 வரை இந்தியா மற்றும் பிரான்ஸ் இடையிலான கூட்டு கடற்படை பயிற்சியான "வருணா-2023"ன் 21வது பதிப்பு மேற்கு கடல் பகுதியில் நடைபெறகிறது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- சமுத்ரயான் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 3 ஆய்வாளர்களை கடலில் 500மீ ஆழத்துக்குள் அனுப்பி ஆய்வு நடத்த இந்தியா திட்டமிட்டுள்ளது.

- விதை உற்பத்தி மற்றும் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக, மரபணு மாற்றப்பட்ட கடுகை பயிரிட அனுமதி அளித்ததில் விதிமுறைகள் மீறப்படவில்லை என மத்திய அரசு அறிவிப்பு.
    - கடுகின் பெயர் – டிஎம்ஹெச் 11 (DMH-11)
    - தில்லி பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டது.

- இந்திய எல்லையில் பணிபுரியும் ராணுவ வீரர்களுக்கு தேவையான பொருள்களை கொண்டு செல்லும் ஆளில்லா விமானமானத்தை தானியங்கி முறையில் DRDO வடிவமைத்துள்ளது.
    - DRDO – Defense Research and Development Organization

- சூரிய வெப்ப ஆற்றலை பயன்படுத்தி கட்டடக் கழிவுகளை மறு சுழற்சி செய்யும் முறையினை சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
    - இத்திட்டத்தின் படி கட்டக்கழிவுகளை சூரிய வெப்ப ஆற்றலால் வெப்பமடையச் செய்து மறுசுழற்சி முறையில் கான்கீரீட்டாக மாற்ற முடியும். இதனை புளூமெட்டல் மற்றும் மணல் ஆகியவற்றிற்கு பதிலாக பயன்டுத்த முடியும்

- ஜனவரி 26-ல் மூக்கு வழியாக செலுத்தும் இந்தியாவின் முதலாவது கரோனா தடுப்பு மருந்து "இன்கோவேக் (iNCOVACC)" அதிகாரப்பூர்வமாக அறிமுகம் செய்யப்பட உள்ளது.

- ஜனவரி 23-ல் இந்திய கப்பற்படையில் கல்வரி ரகத்தை சேர்ந்த 5வது நீர்மூழ்கி கப்பலான "ஐஎன்எஸ் வாகீர்" இணைந்துள்ளது.
    - பிரான்ஸ் நிறுவனத்துடன் இணைந்து மஸகான் டாக் கப்படல் கட்டும் நிறுவனம் வாகீர் நீர்மூழ்கி கப்பலை கட்டியது.
    - "புராஜெக்ட் 75" திட்டத்தின் கீழ் இந்தியாவில் முழுமையாக உருவாக்கப்பட்ட ஐந்தாவது நீர்மூழ்கி கப்பல்.
    - ஐஎன்எஸ் கல்வரி, ஐஎன்எஸ் கண்டேரி, ஐஎன்எஸ் கரஞ்ஜ், ஐஎன்எஸ் வேலா இதுவரை இத்திட்டதின் கீழ் கட்டப்பட்ட கப்பல்களாகும்

- "டுநாட்பே" என்ற சட்ட ஆலோசனை வழங்கும் நிறுவனம் உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு ரோபோ வழக்கறிஞரான "ROSS"யை உருவாக்கியுள்ளது.

DHEERAN IAS ACADEMY

- பிப்ரவரி மாதத்தில் அமெரிக்க நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாட உள்ளது குறிப்பிடத்தக்கது.

- இந்தியாவில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட D.M.H-11 என்ற கடுகு பயிரை வணிக உற்பத்திகாக பரிசோதனை செய்ய மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கட்டுபாட்டில் செயல்பட்டு வரும் மரபணு பொறியியில் மதிப்பீட்டுக் குழு அண்மையில் அனுமதி அளித்துள்ளது.
  - D.M.H – Dhara Mustard Hybrid
  - 2002 – மரபணு மாற்ற பி.டி பருத்தி அறிமுகம்
  - 2007 – மரபணு மாற்ற பி.டி கத்திரி அறிமுகம்

- காற்று மாசுபாட்டின் ஆதாரங்களை கண்டறிய நிகழ்நேர மூல ஆய்வுக்காக "சூப்பர் சைட்" மற்றும் நடமாடும் காற்றின் தர கண்காணிப்பு நிலையம் டெல்லியில் துவங்கபட்டுள்ளது.

## விருதுகள்

- இந்திய ரயில்வேயின் வாரணாசி கான்ட் ரயில் நிலையத்திற்கு FSSAI சரியான உணவு நிலையம் என்ற விருதினை அளித்துள்ளது.

- அமெரிக்க ஹார்வர்ட் சட்டக் கல்வி நிறுவனத்தின் சட்டத் தொழில் மையம் சார்பில் வழங்கப்படும் "சர்வதேச தலைமை பண்பு விருது"க்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தேர்வு செய்ப்பட்டுள்ளார்.

- ஆர்ஆர்ஆர் திரைப்படத்தின் "நாட்டு நாட்டு" பாடல் கோல்டன் குளோப் விருதினை பெற்றுள்ளது.

- ஜனவரி 16-ல் தமிழக அரசின் சார்பில் திருவள்ளுவர், பெரியார், அண்ணா உள்ளிட்ட 10 விருதுகள் வழங்கப்பட உள்ளது.
  - திருவள்ளுவர் விருது (2023) – இரணியன் நா.கு.பொன்னுசாமி
  - தேவநேயப்பாவணர் விருது – முனைவர் இரா.மதிவாணன்
  - அண்ணா விருது (2022) – உபயதுல்லா
  - காமராஜர் விருது – ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்
  - பாரதியார் விருது – முனைவர் ஆ.இரா.வேங்கடாசலபதி
  - பாதிதாசன் விருது – வாலஜா வல்லவன்
  - திரு.வி.க விருது – நாமக்கல் பொ. வேல்சாமி
  - கி.ஆ.பெ. விசுவநாதம் விருது – கவிஞர் மு.மேத்தா
  - பெரியார் விருது – கவிஞர் கலி. பூங்குன்றன்
  - அம்பேத்கர் விருது – எஸ்.வி. ராஜதுரை

- பள்ளி சுகாதாரம், மாதவிடாய் விழிப்புணர்வு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டதற்காக தமிழ்நாடு இரு விருதுகளை பெற்றுள்ளது.

- ஜனவரி 23-ல் 11 சிறார்களுக்கு “ராஷ்டிரீய பால் புரஸ்கார்” விருதினை குடியரசுத்தலைவர் வழங்குகிறார்.
    - கலை, கலாச்சாரம், வீர தீர செயல், புதுமை, சமூக சேவை, கல்வி மற்றும் விளையாட்டு உள்ளிட்ட 6 பிரிவுகளில் சிறந்து விளங்கிய 5 வயது முதல் 18 வயது வரை உள்ள சிறார்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

- பாடகி வாணி ஜெயராமுக்கு பத்ம பூஷன் விருது அறிவிக்கப்பட்டுள்ளது

- செங்கல்பட்டை சேர்ந்த பாம்பு பயிற்சியாளர்களான வடிவேல் கோபால், பூசாரி சடையன், பரத நாட்டிய கலைஞர் பாலம் கலியாணசுந்தரம், காந்தியவாதி அப்புகுட்டன்உள்ளிட்ட 5 பேருக்கு பத்மஸ்ரீ விருது மத்திய அரசு அறிவிப்பு.

- கலை இலக்கியம், விளையாட்டு, மருத்துவம் சமூகப் பணி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய 106 பேருக்கு பத்ம விருதுகள் மத்திய அரசு அறிவிப்பு.

- 2022-ம் ஆண்டுக்கான சிறந்த வீரர், வீராங்கனை விருது அறிவிப்பு
    - உலகின் நம்பர் 1 வீரர் விருது – முகமது சிராஜ்
    - சிறந்த 20t20 வீரர் விருது – சூர்யகுமார் யாதவ் (இந்தியா)
    - சிறந்த வீராங்கனை விருது – டஹலா மெக்ராத் (ஆஸ்திரேலியா)
    - வளர்ந்து வரும் வீராங்கனை விருது – ரேணுகா சிங் (இந்தியா)

- புதுக்கோட்டை பெண் விவசாயி க.வசந்தாவிற்கு வேளாண்மைத் துறை சிறப்பு விருதினை தமிழக முதல்வர் வழங்கினார்

## விளையாட்டு நிகழ்வுகள்

- BCCI 2022-ம் ஆண்டுக்கான சிறந்த விரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.
    - டி20 போட்டி
        - ஸ்மேன் – சூர்யகுமார் யாதவ்
        - சிறந்த பௌலர் – புவனேஷ்குமார்
    - ஒருநாள் போட்டி
        - சிறந்த பேட்ஸ்மேன் – ஸ்ரேயர்ஸ் அய்யர்
        - சிறந்த பௌலர் – முகமது சிராஜ்
    - டெஸ்ட் போட்டி
        - சிறந்த பேட்ஸ்மேன் – ரிஷப் பந்த்
        - சிறந்த பௌலர் – ஜஸ்பிரீத் பும்ரா
- தமிழகத்தினை சேர்ந்த 16 வயதுடைய பிரனேஷ் இந்தியாவின் 79வது கிராண்ட் மாஸ்டராக உருவெடுத்துள்ளார்.
- ஒடிசாவின் ரூர்கேலாவில் 261கோடி செலவில் அமைக்கப்பட்ட பிர்சா முண்டா நவீன ஹாக்கி மைதானத்தினை ஒடிசா முதல்வர் திறந்து வைத்துள்ளார்
    - ஒடிசா முதல்வர் – நவீன் பட்நாயக்

DHEERAN IAS ACADEMY

- ஜனவரி 13-ல் சர்வதேச ஹாக்கி சம்மேளனம், ஹாக்கி இந்திய, ஒடிசா அரசு சார்பில் நடத்தப்படும் பில்எஃப்ஜஎச் ஆடவர் ஹாக்கி உலககோப்பை சாம்பியன் போட்டி ஒடிசாவின் ரூர்கோலா மைதானத்தில் நடைபெற உள்ளது.
    - உலகின் மிகப்பெரிய மைதானம் இதுவே.
    - 20000 பார்வையாளர்கள் இங்கு அமரலாம்

## முக்கிய தினங்கள்

- ஜனவரி 9ல் மத்தியபிரதேசம் இந்தூரில் 17வது பிரவாசி பாரதிய நிவாஸ் மாநாடு நடைபெற்றுள்ளது.
    - கருப்பொருள் : “Diaspora : Reliable partners for India’s progress in Amrit Kaal”

- ஜனவரி 12ல் சென்னை கலைவாணர் அரங்கத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் அயலகத் தமிழர் தினம் நடைபெற உள்ளது.

- தேசிய இளைஞர் தினம் (ஜனவரி 12)
    - விவேகானந்தர் பிறந்த நாள் 1984 முதல் தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

- தேசிய பேரிடர் மீட்புப் படை எழுச்சி தினம் – ஜனவரி 19

- ஜனவரி 23-ல் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் 127வது பிறந்த தினத்தினை முன்னிட்டு அந்தமான் நிக்கோபரை சேர்ந்த பெயரிடப்படாத 21 தீவுகளுக்கு “பரம்வீர் சக்ரா” விருது பெற்றவர்களின் பெயரை பிரதமர் மோடி சூட்டியுள்ளார்.
    - நேதாஜியின் பிறந்த நாள் விழா “தைரிய தினம்”-ஆக கொண்டாடப்பட்டு வருகிறது.
- .

| | |
|---|---|
| மேஜர் சோம்நாத் சர்மா | சோம்நாத் தீவு |
| சுபேதார் கரம் சிங் | கரம் சிங் தீவு |
| லெப்டினென்ட் ராமா ரகோபா ராணே | ராணே தீவு |
| நாயக் ஜதுநாத் சிங் | ஜதுநாத் தீவு |
| ஹவிலதார் மேஜர் பிரு சிங் | பிரு தீவு |

| | |
|---|---|
| கேப்டன் ஜிஎஸ் சலாரியா | சாலாரியா தீவு |
| மேஜர் தன் சிங் தாபா | தன் சிங் தீவு |
| சுபேதார் ஜோகிந்தர் சிங் | ஜோகிந்தர் தீவு |
| மேஜர் ஷைதான் சிங் | ஷைதான் சிங் தீவு |
| ஹவில்தார் அப்துல் ஹமீது | ஹமீது தீவு |
| லெப்பபடினெனட் கர்னல் அர்தேஷிர் புர்ஜோர்ஜி தாரப்பூர் | தாராப்பூர் தீவு |
| லேன்ஸ் நயக் ஆல்பர்ட் எக்கா | எக்கா தீவு |
| மேஜர் ஹோஷியார் சிங் | ஹோஷியார் தீவு |
| லெப்டினென்ட் அருண் கேத்ரபால் | கேத்ரபால் தீவு |
| விமானி நிர்மல்ஜித் சிங் சேகரன் | சேகரன் தீவு |
| மேஜர் ராமசாமி பரமேஸ்வரன் | ராமசாமி தீவு |
| சுபேதார் பாணா சிங் | பாணா தீவு |
| கேப்டன் விக்ரம் பத்ரா | பத்ரா தீவு |
| லெப்டினென்ட் மனோஜ் குமார் பாண்டே | பாண்டே தீவு |

| | |
|---|---|
| சுபேதார் மேஜர் சஞ்சய் குமார் | சஞ்சய் தீவு |
| சுபேதார் மேஜர் யோகேந்திர சிங் யாதவ் | யோகேந்திரா தீவு |

- தேசிய வாக்காளர் தினம் (ஜனவரி 25).
    - கருப்பொருள் : "வாக்களிப்பதை போல எதுவும் இல்லை, நான் நிச்சயமாக வாக்களிக்கிறேன்"
- 74வது இந்திய குடியரசு தினம் (ஜனவரி 26)
- தியாகிகள் தினம் (ஜனவரி 31)
    - மகாத்மா காந்தியின் நினைவு நாளை முன்னிட்டு தியாகிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது

-----------------------------------